## மணம் வீசிய மல்லிகைகள்

உலகளாவிய ரீதியில் மட்டுமன்றி நம் நாட்டிலும் பல மாற்றுத்திறனாளிகள் பல தடைகள் இருந்த போதிலும் அவற்றினை வெற்றிகொண்டு குன்றிலிட்ட தீபமாய் ஒளிர்கின்றனர். இவ்வாறானவர்களது வாழ்க்கைப் பதிவுகளே முற்றத்து மல்லிகையாய் வலுவில் மணம் வீசுகின்றது. இங்கே வலு-7 தொடக்கம் வலு-12 வரையான இதழ்களில் க.தர்மசேகரம் அவர்களும், வலு-13 தொடக்கம் வலு-25 வரையான இதழ்களில் கணபதி சர்வானந்தா அவர்களும் நேர்காணல் ஊடாக ஆக்கங்களைப் பதிவு செய்திருந்தனர். இவர்களுக்கு வலு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றது. வலு-25 இதழ்களில் வெளிவந்த நம் நாட்டு மாற்றுத்திறனாளிகளது சுருக்க வரலாறுகள் இங்கே மணம் வீசுகின்றது.

நா.கீதா கிருஸ்ணன்.
பிரதம ஆசிரியர்

### சொர்ணலிங்கம் தருமதன்

### வலு -01

1992ம் ஆண்டு 09ம் மாதம் 29ம் திகதி சொர்ணலிங்கம் தேவராணி தம்பதியினருக்கு மகனாக பிறந்தவர் தான் தருமதன். இவர் கோண்டாவில் எனும் ஊரில் வசித்து வருகிறார். எனக்கு 8 வயதாக இருந்த போது ஏற்பட்ட காய்ச்சலுக்கு மருந்துமனையில் சிக்சையினைப் பெற்றுக் கொண்டேன். அங்கு வழங்கப்பட்ட மருந்து ஒவ்வாமை காரணமாகவே பார்வைப் புலப் பாதிப்பு ஏற்பட்டது என கூறுகிறார் தருமதன். இந்நிலையில் என்ன செய்வது என்று அறியாது தவித்தார். எனினும் கல்வியூடாக வாழ்க்கையில் முன்னேறலாம் என நினைத்து கற்கலானார். இவரது எண்ணம் வீண்போகவில்லை. 2004ல் யூனியன் கல்லூரியில் இணைந்து பிரெய்ல் முறையில் கல்வியைத் தொடர்ந்த இவர், க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் 7A, 2B சித்திகளையும், க.பொ.த உயர் தரத்தில் 3A சித்திகளைப் பெற்று சட்டத்துறைக்குத் தெரிவானார். இவர் இன்று ஓர் சட்டத்தரணி.

### சசிகலா பத்மநாதன்

### வலு -02

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சசிகலா, பத்மநாதன் கமலேஸ்வரி தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தவர். “பிறந்து 9மாதங்களாக இருந்த போது எனக்கு காய்ச்சல் ஏற்பட்டது என்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையின் போது பாவித்த அதீத மருந்துகள் எனது இரு கால்களினையும் ஒரு கையினையும் செயலிழக்க வைத்து விட்டது என்று என் பெற்றோர்கள் கூறினார்கள்” என்கிறார் சசிகலா. பிற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ சிகிச்சைகள், பயிற்சிகள் என்பவற்றின் பயனாக ஒரு கையும் ஒரு காலும் செயற்றிறன் மிக்கதாக மாற்றம் அடைந்தது என்றும் கூறுகிறார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ். சென்மேரிஸ் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை வேம்படி மகளிர் கல்லூரியிலும் படித்தார். தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் கற்று புவியியல் சிறப்பு கலைமானிப்பட்டத்தையும் பிராந்திய திட்டமிடல் கற்கை நெறியில் முதுமானிப்பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் நல்லூர் பிரதேச செயலகத்தில் காணி

அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றியுள்ளார். தற்போது குடும்பத்துடன் அமொரிக்காவில் வாழ்ந்து வருகிறார்.

**சோமசுந்தரம் புவிராஜசிங்கம்**

**வலு -03**

மட்டக்களப்பு மகிழவெட்டுவான் கிராமத்தைச் சேர்ந்தவர் தான் சோமசுந்தரம் புவிராஜசிங்கம். விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் க.பொ.த. சாதாரணதர கல்வியை முடித்த பின் விவசாயத்திலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 1990களில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக விவசாயம் செய்ய முடியாமல் போகவே இவர் மட்டகளப்பு நகரப் பகுதிக்கு வந்தார். ஆயினும் விதி இவரை விட்டு வைக்கவில்லை. யுத்தம் இவரது இரு கைகளையும் பறித்து விட்டது. மிகுந்த வேதனைகளுக்கு மத்தியில் தனது வாழ்க்கையைத் தொடர்ந்த இவர் கால்களால் எழுதக் கற்றுக் கொண்டார். இவரை மட்டக்களப்பு ஜீவ ஜோதி இல்லத்திற்கு பொறுப்பாக இருந்த திருவாளர் இளங்கோ அவர்கள் அங்குள்ள ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளுக்கு கற்பிக்க ஆசிரியராக நியமித்தார். இங்கே 5 ஆண்டுகள் பணியாற்றிய இவர் மீண்டும் 2001ம் ஆண்டு தனது பிறந்த கிராமத்திற்கு சென்று அங்கேயும் கற்பித்தார். பலரது உதவியுடன் விசேட தேவைக்குட்பட்டவர்களை ஒன்றிணைத்து 2007ம் ஆண்டு வாழ்வகம் என்ற அமைப்பை உருவாக்கினோம் என்று கூறுகிறார் புவிராஜசிங்கம். இதில் 530க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் இருக்கின்றனர். மேலும் தனது காணியிலே சிறிய கடையொன்றை அமைத்துள்ள இவர், தன் மனைவி பிள்ளையுடன் சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றார்.

**காசிநாதர் விஜயராயசிங்கம்**

**வலு -04**

தென்மராட்சியிலுள்ள மத்துவில் கிராமத்தில் 1961ம் ஆண்டு ஜுன் மாதம் 14ம் திகதி காசிநாதர் பார்வதிப்பிள்ளை தம்பதியினருக்கு ஆறாவது மகனாக விஜயராயசிங்கம் பிறந்தார். இவருக்கு 5 வயதிலிருந்து சிறிது சிறிதாக பார்வை குறையத் தொடங்கியது. 7 வயதான போது முற்றாகவே பார்வையினை இழந்தார். கைதடி நவீல்ட் செவிப்புல விழிப்புலனற்றோர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியினைக் கற்ற இவர், க.பொ.த சாதாரணதரத்தினை மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும், க.பொ.த உயர்தரத்தினை Drieberg கல்லூரியிலும் பயின்று சித்தியெய்தினார். அக் காலத்தில் பார்வையற்றோர் தொடர்பான விழிப்புணர்வு சமூகத்தில் மிகவும் குறைந்த அளவே இருந்தது. இந்நிலையினை மாற்றியமைக்கும் நோக்குடன் இவர் நண்பர்களுடன் சேர்ந்து 1975ம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி யாழ். விழிப்புலன் அற்றோர் சங்கத்தை உருவாக்கினார். மேலும் “அன்று பார்வையற்ற யாவரும் க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சை எழுதுவதென்றால் கொழும்பு ரத்மலானை விழிப்புலனற்றோர் பாடசாலைக்கு செல்ல வேண்டும். இந்த நிலையினை மாற்றி யாழ்ப்பாணத்தில் பரீட்சை நிலையம் அமைக்க வேண்டும் என்று நான் பல முயற்சிகளை மேற்கொண்டதன் பயனாக 1974ல் முதன்முதலாக தமிழ் பிள்ளைகளுக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் பரீட்சை நடைபெற்றதாகக் கூறுகிறார் விஜயராயசிங்கம். இவர் இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளன வட மாகாண

கிளையின் தலைவராகவும், செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் பல நிறுவனங்களில் உறுப்பினராக இருந்து மாற்றுத்திறனாளிகள் சமூகப்பணிகள் செய்து வருகின்றார். திருமணத்தின் பின் பண்டாரவளையில் வாழ்ந்து வருகிறார்.

**கனகசபை சிவகுமாரன்**

**வலு -05**

காங்கேசன்துறை தையிட்டி கிராமத்தில் திருதிருமதி கனகசபை செல்வபூரணம் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் தான் சிவகுமாரன். இவர் தனது ஆரம்பக் கல்வியினை காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியில் பயின்ற இவர். குடும்பப் பொருளாதார நிலை, நாட்டின் அசாதாரண சூழ்நிலை என்பனவற்றால் 1988ம் ஆண்டு அரபு நாடு ஒன்றிற்குச் சென்றேன். அங்கு Hanco Renta car நிறுவனத்தில் சாரதியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் 1990ம் ஆண்டு ஜூன் மாதம் 28ம் திகதி அன்று வழமை போல் காரில் வேலைக்குச் சென்றுகொண்டிருந்த வேளை வீதியைக் கடந்து கொண்டிருந்த ஒட்டகம் ஒன்று எனது காரின் மேலே விழுந்து விட்டது. அதனால் கார் சேதமடைந்ததுடன் நானும் காயப்பட்டேன் என்று கூறும் சிவகுமாரன் இதனால் எனது கழுத்தில் ஏற்பட்ட முறிவு காரணமாக முள்நாண் தண்டுவடம் spinal code பாதிக்கப்பட்டதனால் கழுத்துக்கு கீழ் இயக்கமற்ற நிலையில் உள்ளதாகவும் கூறுகிறார். உடலில் பெரும்பாலான பகுதி செயலற்ற நிலையிலும் மற்றவர்களிடம் தங்கி வாழக் கூடாது என்ற மனநிலையில் வாழும் இவர் தொலைபேசிகளுக்கான ரீலோட் போடுதலை தொழிலாக செய்து வருகிறார். இச் சேவை மூலம் பல நண்பர்கள் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளார். படுக்கையில் இருந்தாலும் துடுப்பாய் இருக்கும் இவரது வாழ்க்கை மற்றய மாற்றுத்திறனாளிகளுக்கும் வழி காட்டும் என நம்பலாம்.

**வேலுப்பிள்ளை கந்தசாமி**

**வலு -06**

வேலணையிலுள்ள சரவணை 9ம் வட்டாரத்தில் 1940ம் ஆண்டு வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார் கந்தசாமி. இவருக்கு 14 வயதாக இருந்த போது அம்மை நோய் ஏற்பட்டது. இதன் காரணமாக கண் பார்வையினை இழந்தார். அந் நிலையில் இவரும் தாயாரும் தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலுள்ள மடம் ஒன்றில் தங்கி இருந்த வேளை தமது வாழ்வாதாரத்துக்காக இவர் கற்பூரம் விற்கலானார். அக்காலத்தில் பார்வையற்றோர் கற்பதற்கான வசதிகள் இருக்காமையினாலும் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் இவரால் படிக்க முடியவில்லை. அந்தக் கஷ்டங்களை நன்கு உணர்ந்தவராய் கற்பூரம்விற்று பெற்ற பணத்தின் ஒரு பகுதியை பார்வையற்ற மாணவர்களுக்கு வழங்கும் உயரிய சிந்தனையோடு யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தில் கல்வி நிதியம் ஒன்றினை ஆரம்பித்தார். இதனூடாக பார்வையற்ற மாணவர்களுக்கு நிதி உதவிகள் வழங்க ஏற்பாடுகள் செய்தார். விழி இழந்த வேளையிலும் கற்பூர ஒளியில் சந்நிதியானை ஒளிரச் செய்து, விழி இழந்த மாணவர்களுக்கு கல்வி ஒளிகாட்டிய இவர் இன்று சந்நிதியான் திருவடிகளில் நித்திலம் ஆகிவிட்டார்.

**வேலாயுதம் சரவணபவன்**

**வலு -07**

பருத்தித்துறையிலுள்ள மந்திகையில் வேலாயுதம் மனோன்மணி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் தான் சரவணபவன். பிறக்கும் போதே இவருடைய கண்கள் பார்க்கும் சக்தியை இழந்திருந்தன. இவர் ஆரம்பக் கல்வியை நவீல்ட் பாடசாலையிலும், உயர் தரக் கல்வியினை யாழ். பரியோவான் கல்லூரியிலும் கற்றார். இவர் சிறு வயதிலிருந்தே இசைத்துறையில் ஆர்வம் மிக்கவராய் இருந்தார். பல இசை ஆசிரியர்களின் வழிகாட்டலில் இசைத்துறையில் முன்னேறினார். வயிலின், புல்லாங்குழல், ஓகன், மிருதங்கம் என பல வாத்தியங்களை இசைப்பதில் திறமைமிக்கவராய் இருக்கிறார். இசைஞானி இளையராஜாவை மானசீகக் குருவாக ஏற்று தானும் ஒரு இசையமைப்பாளராக வர வேண்டும் என்பது தன்னுடைய பெரும் இலட்சியம் என்று கூறுகிறார் சரவணபவன். இன்று இவரிடம் பல மாணவர்கள் இசைக் கருவிகளை வாசிக்க பயிற்சி பெற்று வருகின்றனர்.

**நடராஜமூர்த்தி கீதாஞ்சலி**

**வலு -08**

மிருசுவிலில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 03ம் திகதி நடராஜமூர்த்தி சுகந்திராதேவி தம்பதியினருக்கு இரண்டாவது மகளாக கீதாஞ்சலி பிறந்தார். பிறக்கும் போதே இவருடைய ஒரு காலும் ஒரு கையும் செயல்த்திறன் அற்ற நிலையில் காணப்பட்டது. ஆரம்பக்கல்வியினை விடத்தல் பளை கமலாசினி வித்தியாலயத்திலும், இடை நிலைக் கல்வியை உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திலும், உயர்தரத்தினை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பயின்ற இவர் 2001ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக கலைப்பிரிவுக்குத் தெரிவானார். கலைப்பட்டதாரியான இவர் தற்பொழுது நல்லூர் பிரதேச செயலகத்தில் பணியாற்றி வருகின்றார். ஓய்வு வேளைகளில் சிறார்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கின்றார். இது என் மனதிற்கு மகிழ்ச்சியைத் தருவதாகக் கூறுகின்றார்.

**பொன்னுத்துரை ஸ்ரீ வாமதேவன்**

**வலு -09**

மட்டுவில் கிராமத்தில் 1948ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21ம் திகதி பொன்னுத்துரை சரஸாம்பிகை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் தான் வாமதேவன். இவருக்கு ஒரு வயதிலிருந்து பார்வை படிப்படியாக குறையத் தொடங்கியது. பின்னாளில் அதாவது 1964ம் ஆண்டு இதற்கான காரணம் குளுகோமா நோயால் ஏற்பட்டது என அறியப்பட்டது. மேலும் 1990 ஆண்டு ஏற்பட்ட ஒரு விபத்தில் இவரின் பார்வை முற்றாக பறிபோனது.

சிறு வயதினிலேயே இசையில் ஆர்வம் மிக்கவராய் இருந்த இவர் பல இசை ஆசிரியர்களிடம் கற்றுத் தேர்ந்தார். 1970ம் ஆண்டு தமிழ் நாட்டு அரச இசைக் கல்லூரி இவருக்கு சங்கீத வித்துவான் பட்டத்தினை வழங்கியது. வாய் பாடு மற்றும் வயலின் என்பனவற்றிற்காகவே இப் பட்டம் வழங்கப்பட்டது. இவரால் 1985ம் ஆண்டு எழுதப்பட்ட ‘‘முத்துமுத்தான இரத்தினங்கள்’’ என்ற பாடல் 1990ம் ஆண்டு ஆசிரிய கீதமாக பிரகடனப்படுத்தப்பட்டது. மேலும் 1997ம் ஆண்டு சங்கீதம் என்ற பெயரில்

நூல் ஒன்றை எழுதியுள்ளார். 1975 தொடக்கம் 2008 வரை ஆறு பாடசாலைகளில் 33 வருடங்கள் இசை ஆசிரியராக பணியாற்றியுள்ளார். இக்காலங்களில் மாணவர்கள் என்னிடம் மிகவும் விருப்பத்துடன் பயின்றதாக கூறுகின்றார் வாமதேவன். இவர் தற்போது தனியார் வகுப்புக்கள் மூலம் சங்கீதம் மற்றும் இசையை கற்பித்து வருகிறார்.

**திலகேஸ்வரி குமுதறஞ்சன்**

**வலு -10**

வேலாயுதம் ஈஸ்வரி தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தவர் தான் திலகேஸ்வரி. இவர் இளவயதினிலேயே இளம் பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டமையினால் கால்கள் பாதிக்கப்பட்டன. எனினும் இவரதும் பெற்றோர்களினதும் முயற்சி இவரை நடக்கச் செய்தது. இவரது குடும்ப நிலை அக்காலச்சூழல் என்பனவற்றால் இவரால் தொடர்ந்தும் மருத்துவ வசதியினைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது. இந் நிலையில் கல்வியைத் தொடர்ந்த இவர் சாதாரண தரம் வரை பயின்று ராஜகிரிய சுதேச மருத்துவ நிறுவனத்திற்கு தெரிவானார். அங்கு தனது பயிற்சியை முடித்துக் கொண்ட இவர், பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையிலும் கற்று பட்டம் பெற்றார். தற்போது இவர் சித்த மருத்துவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றுகிறார். மருத்துவ ஆய்வுக்கான புலமைப்பரிசினையும் பெற்றுள்ளார். இதற்கான நடவடிக்கையாக நீரிழிவு நோயின் தன்மையை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான மருந்தினை கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். எதிர் காலத்தில் அனைவரும் நீரிழிவு நோயிலிருந்து விடுபட வேண்டும் என்பதே தனது விருப்பம் என்று கூறுகிறார்.

**கனகராஜா நந்தகுமாரன்**

**வலு -11**

கரம்பனில் 1972ம் ஆண்டு கனகராஜா புஸ்பராணி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக நந்தகுமாரன் பிறந்தார். இவருக்கு ஒரு வயதாக இருக்கும் போது போலியோ நோய் ஏற்பட்டது. இதனால் கால்கள் பாதிகப்பட்டன.

“நான் ஆரம்பக் கல்வியை திருகோணாமலையிலுள்ள உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் கற்றேன்.. பின்னர் இடைநிலைக் கல்வியை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் படித்த காலத்தில் நாட்டின் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணம் வந்து யாழ். இந்துக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன். க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் கற்று யாழ். பல்கலைக்கழக மருத்துவ பிரிவிற்கு தெரிவானேன். இக்காலத்தில் வலு இழந்தவர்களுக்கான அணுகு வசதிகள் இல்லாமையினால் என்னால் மேல்மாடிக் கட்டடங்களில் நடைபெற்ற சில வகுப்புக்களுக்கு சமூகமளிக்க முடியவில்லை. ஆனாலும் மனம் சோராது வெற்றிகரமாக கற்றலை, நிறைவு செய்து உள்ளகப் பயிற்சி மருத்துவராக யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றத் தொடங்கினேன். அங்கும் மாடிப்படிகள் ஏறுவது சிரமமாகவே இருந்தது. இதைக் கருத்திற் கொண்டு எனது உடல் இயங்கும் நிலைக்கு ஏற்றவாறு சார்புறுப்பு ஒன்றை வடிவமைத்துக் கொண்டேன். இதன் பின்னர் எனது சுய

இயங்கு திறன் மேலும் விருத்தியடைந்ததை என்னால் உணர முடிந்தது. இவ்வாறு நான் எனது கற்றலைத் தொடர்ந்து மருத்துவ பீடத்தை நிறைவு செய்தேன் என்கின்றார் டெக்ரர் நந்தகுமாரன்

இவர் தனது முதல் பணி நியமனத்தை பெற்று திருகோணாமலை வைத்தியசாலையில் 2001- 2003 பணியாற்றினார். 2006 கிளிநொச்சியில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும், 2007- 2008 மாகாண பதில் சுகாதாரசேவை பணிப்பாளராகவும், 2010ல் மந்திகை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராகவும் பணியாற்றினார். தொடர்ந்து 2014 யாழ். போதனா வைத்தியசாலையில் பிரதிப்பணிப்பாளராகவும், 2015 பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். கால்கள் செயலற்ற நிலையிலும் தன்நம்பிக்கையுடன் பயணித்து இன்று பிரபல வைத்தியராக திகழும் இவரது வரலாறு பலருக்கும் வழிகாட்டும் என நம்புகின்றோம்.

**மயில்வாகனம் ஈஸ்வரதேவன்**

**வலு -12**

அச்சுவேலி அல்வாயில் திருதிருமதி மயில்வாகனம் பொன்னம்மா தம்பதியினருக்கு 1958ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ம் திகதி ஈஸ்வரதேவன் பிறந்தார். இவர் 3 வயதில் போலியோ நோயினால் தாக்கப்பட்டார். இதனால் ஒரு காலின் செயற்றிறன் குன்றியது. ஆரம்பக்கல்வியினை அல்வாய் அம்பாள் வித்தியாலயத்திலும், உயர் தரத்தினை ஹாட்லிக் கல்லூரியிலும் கற்ற இவர், தொடர்ந்து யாழ்.பல்கலைக் கழகத்தில் பயின்று 1985ம் ஆண்டு BSC பட்டத்தினைப் பெற்றார். அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ம் திகதி கணித பாடத்துக்கான ஆசிரிய நியமனம் கிடைத்தது. முதலில் கண்டி நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகாவித்தியாலயத்தில் பணியாற்றினார். தொடர்ந்து யாழ்ப்பாணம் நெல்லியடி மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் 1995முதல் 2005வரை கரவெட்டி, பருத்தித்துறை கோட்டங்களில் கணித பாட ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றிய இவர், 2005 முதல் வடமராட்சி வலயத்தில் கணித பாட உதவிக்கல்வி பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

**நடராஜா ஜெயராஜ்**

**வலு -13**

நல்லூரை சேர்ந்த நடராஜா ஜெயராஜ் என்பவருக்கு ஐந்து வயதாக இருந்த போது போலியோ நோய் தாக்கியது. இதனால் இவரது இரு கால்களும் செயலற்றுப் போயின. இவர் தனது கல்வியினை கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயத்தில் பயின்றார். திருநெல்வேலியிலுள்ள கராஜ் ஒன்றில் சேர்ந்து வேலை பழகினார். பின்னர் 21 வயதில் அத் தொழிலை தாமே தனித்து செய்யும் நோக்குடன் பொற்பதி றோட்டில் “அப்பன் மோட்டார் வேக்ஸ்” என்ற பெயரில் கராஜ் ஒன்றை ஆரம்பித்தார். தற்போது இவரது கராஜ் தாவடியில் இயங்கி வருகிறது.

தொழிலுக்கான முதல் தேடுறது தான் பிரச்சினையாக இருந்தது. மாற்றுத்திறனாளியா இருக்கிறதால பொதுவா உதவி செய்யத் தயங்கிற நிலைதான் எங்கட ஆக்களிட்ட இருக்கு. அந்த வகையில எங்கட முன்னேற்றத்தில அக்கறையுள்ள அப்பா, அம்மா

செய்த உதவி எனக்குக் கொஞ்சம் ஆறுதலா இருந்தது. பிறகு தொழிலிலையும் சில போட்டி வந்தது. அதையும் என்ர கெட்டித்தனத்தால சமாளிச்சுப் போட்டன் என்கின்றார் ஜெயராஜ்.

**முன்னாள் மாநகர சபை ஆணையாளர் வாகீசன்**

**வலு -14**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வாகீசன் 3வயதில் இளம் பிள்ளை வாதநோயினால் பாதிக்கப்பட்டமையினால் இரு கால்களும் செயலற்றுப் போயின. எனது பெற்றோர்களினது ஊக்கமும் எனது முயற்சியும் என்னை நடக்க வைத்தது என்கின்றார் வாகீசன். யாழ் மத்திய கல்லூரியில் பயின்ற இவர் தனது பட்டப்படிப்பை திறந்த பல்கலைக் கழகத்தில் 1999ல் பூர்த்தி செய்தார். பின்னர் சிறிது காலம் தனியார் நிறுவனம் ஒன்றிலும், வைத்திய சாலை ஒன்றிலும், கடை ஒன்றிலும் பணி புரிந்தார். இவர் தொடர்ந்து ஜோன்கீல்ஸ் நிறுவனத்தில் முகாமைத்துவ பயிற்சியாளராக நான்கு வருடங்கள் பணியாற்றினார். இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த இவர் வடக்கு- கிழக்கு மாகாணசேவை மாகாணப் பொது நிர்வாக அமைச்சில் துணைச் செயலாளராகக் கடமையாற்றினார். 2010ல் புலமைப்பரிசில் ஒன்றின் மூலம் ஜப்பான் சென்று கற்ற இவர், பின்பு 2012ல் யாழ் வந்து மாகாணசபை முகாமைத்துவப் பயிற்சி நிறுவனத்தில் பணிப்பாளராகவும், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளராகவும் பணியாற்றினார். பின்பு யாழ். மாநகரசபை ஆணையாளராகவும் பணி புரிந்தார்.

**ஞானக்குமரன் ராஜேஸ்வரி**

**வலு -15**

வல்லிபுரக் குறிஞ்சியைச் சேர்ந்தவர் ஞானக்குமரன் ராஜேஸ்வரி. நாட்டில் ஏற்பட்ட யுத்தம் இவரது காலினை காவு கொண்டது. இவரது கணவரும் ஒரு மாற்றுத்திறனாளி. இதனால் இவருக்கு தமது குடும்பத்தை பாக்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. தமது பிதேசத்திலிருந்த வறிய மக்களையும் மாற்றுத்திறனாளிகளையும் ஒன்று சேர்த்து ‘‘பிறைநிலா’’ என்றவொரு நிறுவனத்தை உருவாக்கினார். இதன் ஊடாக இவர்களுக்கு பல்வேறு பட்ட உதவிகளை பெற்றுக் கொடுக்கிறார். அத்துடன் தாமும் இவர்களுள் ஒருவராக வேலை செய்கின்றார். இவற்றுள் பனம் பொருள் உற்பத்திகள் சிறப்புடையது.

**முருகன் றஞ்சன் முத்துக்குமார்**

**வலு -16**

மட்டக்களப்பு பொத்துவில் கிராமத்தில் 1965ல் முருகன் றஞ்சன் முத்துக்குமார் பிறந்தார். ‘‘நான் சிறு வயதில் மென்பானங்களைத் தயாரித்து விற்பனை செய்யும் கடையில் வேலை செய்தேன். 1990ம் ஆண்டு மிதிவெடியில் சிக்கி கால் ஒன்றினை இழந்தேன். பின்னர் ஜெய்ப்பூர் நிறுவன உதவியுடன் செயற்கைக் காலைப் பெற்றுக்

கொண்டேன். அவ்வேளையில் தொழில் எதுவும் இல்லாத நிலையில் மிக்சர் தயாரித்து விற்பனை செய்து வந்தேன். பின்பு கல்விளானில் உள்ள சமூக மேம்பாட்டுக் கழகத்தின் பேக்கரியில் வேலை செய்து வந்தேன். பின்னர் 10 பணியாளர்களைக் கொண்ட அந்த பேக்கரியை நானே நடாத்தி வந்தேன். 2002ல் யாழ்ப்பாணம் வந்து பப்பாசிப்பழம் விற்பனை செய்தேன். மீண்டும் வன்னி சென்று இன்பத்தேன் என்ற யூஸ் கடையையும் சோன்பூர் முகாமில் சர்பத் கடையினையும் நடத்தினேன். குருநாகலில் தேநீர் கடையொன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்த வேளை அந்த கடை முதலாளியின் சிறு உதவியுடன் யாழ்ப்பாணத்தில் முந்திரிகைப்பழ வியாபாரத்தை தொடங்கினேன். பின்னர் இரவுக்கடை ஒன்றில் ரீமேக்கராகவும், ஹோட்டல் ஒன்றில் சமையலாளராகவும் இருந்த போது கிடைத்த வருமானத்தில் கே.கே.எஸ்.வீதி சிவலிங்கப் புளியடியில் இன்பத்தேன் மென்பான நிலையம் ஒன்றை நடாத்தி வருகின்றேன்'' என்கின்றார் முத்துக்குமார்.

**யோகராசா புவிதரன்**

**வலு -17**

நெடுந்தீவைச் சேர்ந்த யோகராசா புவிதரன் யாழ். மத்திய கல்லூரியில் கற்றார். பின்னர் தொலைபேசி கடை ஒன்றில் உதவியாளராகவும், பயிற்சி பெறுபவராகவும் இணைந்து கொண்டார். மேலும் தனியார் வர்த்தக நிறுவனமொன்றில் கையடக்கத் தொலைபேசி விற்பனைப் பிரிவில் விற்பனைப் பிரதிநிதியாக கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் ஒரு நாள் ஆனையிறவுக்கு அண்மையில் விபத்துக்குள்ளானார். இதனால் இவரது இரு கால்களும் வலுவிழந்தன. தொடர்ந்து பல நாட்கள் சிகிச்சைகள் வழங்கப்பட்ட போதிலும் அவரது கால்கள் முன்னைய நிலைக்குத் திரும்பவில்லை. பின்னர் சக்கர நாற்காலியின் உதவியுடன் நடமாடத் தொடங்கினார். தற்போது யாழ்ப்பாணம் கே.கே.எஸ்வீதி சத்திரச் சந்தி அருகில் தொலைபேசிக் கடையொன்றை நடாத்தி வருகின்றார். தனது சொந்த முயற்சியில் முச்சக்கர வண்டி ஒன்றினை வாங்கி அதை தனக்கேற்ற வகையில் மாற்றம் செய்து பயன்படுத்தி வருகின்றார்.

**நடராஜா சோதிலிங்கம்**

**வலு -18**

கோப்பாயைச் சேர்ந்த நடராஜா சோதிலிங்கம் என்பவர் தபாற் கந்தோரில் பணியாற்றியவர். ''நாட்டில் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் அதாவது 1996 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13ம் திகதி அன்று வேலையிலிருந்து வீடு சென்று கொண்டிருந்த வேளையில் மிதிவெடி என்னுடைய காலைப் பதம் பார்த்து விட்டது, இதனால் முழங்கால்களுக்குக் கீழே இரண்டு கால்களையும் இழந்தேன்'' என்கின்றார் சோதிலிங்கம். பின்னர் செயற்கைக் காலுடன் இவர் வாழ்க்கை நடந்தது. தற்போது இவர் மாற்றுத் திறனாளிகளுக்கென உள்ளூரில் வடிவமைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளில் சென்று நிறுவனங்களுக்கு முத்திரைகளை விநியோகித்து வருகின்றார்.

**வினோதினி இராஜரட்ணம்**

**வலு -19**

கிளிநொச்சி அம்பாள் நகரைச் சேர்ந்த வினோதினி என்பவர் பிறக்கும் போதே பார்வையை இழந்திருந்தார். இனிய வாழ்வு இல்லத்தில் இணைந்து பிரெயில்லினைக் கற்ற இவர், தனது ஆரம்பக்கல்வியினை வல்லிபுனம் கனிஷ்ட வித்தியாலயத்திலும், உயர் கல்வியினை உடையார் கட்டு மகாவித்தியாலயத்திலும் கற்றார். தற்போது பல்கலைக் கழகக் கல்வியினை கொழும்பு பல்கலைக் கழக கலைத் துறையில் மேற் கொண்டு வருகின்றார். இசைத்துறையில் ஆர்வம் மிக்க இவர் தனது இனிய குரலால் பாடி பல போட்டிகளில் வெற்றி பெற்று பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றுள்ளார். நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தால் இவரது காலும் பாதிக்கப்பட்டு விட்டது. பிறப்பாலும் யுத்தத்தாலும் குடும்பப் பொருளாதார நிலையாலும் பாதிக்கப்பட்ட இவர் தனது மனேதிடத்தினால் வாழ்க்கையை வெற்றி கொண்டு இன்று உயரிய இடத்தை நோக்கிப் பயணிக்கும் ஒருவராகத் திகழ்கின்றார்.

**அப்புத்துரை றங்கடம்பநாதன்**

**வலு -20**

மூளாய் கிராமத்தில் 1975ம் ஆண்டு அப்புத்துரை றங்கடம்பநாதன் பிறந்தார். இவருக்கு சிறுவயதினிலேயே பார்வைக் குறைபாடு ஏற்பட்டது. இவர் தனது ஆரம்பக் கல்வியினை வட்டு. திருஞானசம்பந்த வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும், உயர்நிலைக் கல்விச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கற்றார். தான் ஒரு ஆசிரியராக வர வேண்டும் என்பதே தன்னுடைய ஆசை என்று கூறும் இவர், அன்றைய வடக்குக் கிழக்கு மாகாண அரசில் கிடைத்த நூலகப் பணியினை ஏற்கவில்லை. தனது அரச ஆசிரியக் கனவு நனவாகாத நிலையில் தனியார் கல்வி நிறுவனங்களில் பாடம் கற்பித்து வரும் இவர், அறநெறிப் பாடசாலை ஒன்றினை நடாத்தி வருகின்றார். 2016 மற்றும் 2018 ம் ஆண்டுகளில் சிறந்த அறநெறி ஆசிரியருக்கான நாட்டின் தேசிய மேன்மை விருதைப் பெற்றுள்ளார். தற்போது இவர் கருவி சலவைச் சவர்க்கார விற்பணையாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

**சிவானந்தன் வினோதன்**

**வலு -21**

மட்டுவிலைச் சேர்ந்தவர் தான் சிவானந்தன் வினோதன். நாட்டில் ஏற்பட்ட யுத்தசூழல் இவரை வன்னி வவுனிக் குளத்திற்கு இடம் பெயரச் செய்தது. அங்கு தனது கல்வியினை மேற்கொண்ட இவர் பின்னர் விவசாயத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 2008ம் ஆண்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தால் இவரின் ஒற்றைக் கால் பறி போனது. இதனால் செயற்கைக் கால் பொருத்தப்பட்டது. பின்னர் ''தேர், மற்றும் மர வாகனங்கள், மரச் சிற்பங்கள் என்பனவற்றை வடிவமைக்கும் ஆசாரியர் கலாமோகனின் தொடர்பு கிடைத்தது இதனால் அவருடன் இணைந்து இப்பணிகளைச் செய்யத் தொடங்கிய நான் இன்று இக் கலையினை சிறப்பாக செய்யக் கூடிய அளவிற்கு தேர்ச்சி பெற்றுள்ளேன். இன்று சொந்தமாக வீட்டின் ஓர் சிறு இடத்தில் இத் தொழிலினை மேற்கொண்டு வரும் அதே வேளை பகலில் பெரும்பாலான நேரங்கனை குருவின் பட்டறையினிலேயே பணியாற்றுவதற்கு செலவிடுகின்றேன்'' என்கின்றார் வினோதன்.

**மாரிமுத்து நாகராசா**

**வலு – 22**

கிளிநொச்சி வட்டக்கச்சியை சேர்ந்தவர் தான் நாகராசா. இவர் 1966ம் ஆண்டு மாரிமுத்து வள்ளியம்மை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு ஒன்பது சகோதரர்கள். இவர் மூத்த பிள்ளையாக இருந்தமையினாலும் குடும்ப பொருளாதார நெருக்கடியினாலும் ஒன்பது வயதினிலேயே கடை ஒன்றில் சிற்பந்தியாக வேலை செய்ய நேரிட்டது.

21 வயதில் குடும்ப வாழ்வில் இணைந்து 06 பிள்ளைகளுடன் மகிழ்வாக வாழ்ந்து கொண்டிருந்த இவரது வாழ்க்கைப்பாதையில் 2009ம் ஆண்டு ஏற்பட்ட கொடூர போர் குறுக்கிட்டது. இதனால் இவர் தனது இடதுகையை இழந்தார். "ஆனாலும் நான் சோர்ந்து போகவில்லை. எனது வாழ்வாதாரத்தை வளப்படுத்த ஆடுகள் வாங்கினேன். வீட்டுத் தோட்டத்திற்கான விதைகள் நட்டேன். கறுவா கோப்பி றக்கன் புரூட் போன்றவற்றையும் நட்டேன். தேனீ வளர்ப்பையும் மேற்கொண்டேன். அத்துடன் கோழி மாடு மற்றும் காளான் என்பனவற்றை வளர்கின்றேன் என்கின்றார் நாகராசா.

2013ம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் சிறந்த வீட்டுத் தோட்ட செய்கையாளருக்கான விருதினையும், முதலாம் இடம், 2014ல் (RDB BANK) சிறந்த வீட்டுத் தோட்ட செய்கையாளருக்கான விருதினையும் முதலாம் இடம், 2016ல் இரண்டாம் இடம் வடமாகாணம் ஜனாதிபதி விருதினையும் பெற்ற இவர் சிறந்த காளான் செய்கையாளர் போட்டியில் பங்கு பற்றி கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளார். மேலும் இவர் தனது காணியின் ஒரு பகுதியில் மில் ஒன்றினையும் செயற்படுத்தி வருகின்றார்.

**இரத்தினம் ராஜரட்ணம்**

**வலு-23**

தென்மராட்சி நாவற்குழியைச் சேர்ந்தவர் தான் இரத்தினம் ராஜரட்ணம். இவர் சேமமடு முதலாம் யுனிற்றில் 1965ல் பிறந்தார். இவரை மூன்று வயதாக இருந்த போது இளம் பிள்ளைவாத நோய் பாதித்ததால் இடது கால் செயலற்றுப் போனது. எனும் தாய் தந்தையின் முயற்சியினால் சேமமடு மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர், தொடர்ந்து கிளிநொச்சி குருகுல விடுதியில் இருந்து கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண வரை கற்றார். 1995ல் யாழ் மாநகர சபையில் தற்காலிக ஊழியராக சேர்ந்த இவர் 2008ல் நிரந்தர ஊழியராக்கப்பட்டார். தற்போது யாழ். பொது நூலாகத்திலே பாதுகாப்பு ஊழியராக பணியாற்றி வருகின்றார். திருமணமாகி மனைவி, மக்களுடன் வாழ்ந்து வரும் இவர் சுயதொழிலாக மரக்கன்றுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றார்.

வலு- 24

**இரத்தினம் கந்தராசா**

மீசாலையைச் சேர்ந்தவர் இரத்தினம் கந்தராசா, இவர் 14 வயதாக இருந்தபோது கண்ணில் ஏற்பட்ட இனந்தெரியாத நோயினால் பார்வையை இழந்தார். ஒன்பதாம் வகுப்பு வரை மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் பயின்ற இவர் பார்வை இழப்பினால் சில காலங்கள்

வீட்டினிலேயே தங்கினார். பின்னர் 1983ம் ஆண்டு நவீல்ட் பாடசாலையில் இணைந்து கல்வியைத் தொடர்ந்தார். சுயதொழில் வல்லமையும், வியாபாரத் திறமையும் கொண்ட இவர். தற்பொழுது கருவி உற்பத்தி சந்தைப்படுத்தல் அலகில் முகாமையாளராகப் பணியாற்றி வருகின்றார். அத்துடன் கருவி நிறுவன ஸ்தாபகர்களுள் ஒருவராகவும், நிருவாக சபை உறுப்பினராகவும் இருந்து சமூகப் பணித்தளத்திலும் தனது பெயரினைப் பதிவு செய்துள்ளார்.

வலு- 25

துரைராசா யசிந்தன்

கருவியின் செயலாளரான துரைராசா யசிந்தன் வலிகாமம் தொல்புரத்தைச் சேர்ந்தவர். இருக்கு 3 வயதாக இருந்த போது ஏற்பட்ட சின்னம்மை நோய் இவரின் இடக்கண் பார்வையைப் பறித்தது. ஒருகண் பார்வையோடு ஆரம்பக்கல்வியினை யாழ் மூளாய் சைவபிரகாச வித்தியாசாலையில் பயின்று கொண்டிருந்த சமயம் பனை ஓலையை எடுத்து விளையாடிக்கொண்டிருந்த பொழுது அதன் தழிர் கண்ணில் குத்தியதால் மறு கண் பார்வையையும் இழக்க வேண்டியதாயிற்று.

இந்நிலையில் சில ஆண்டுகளின் பின் 1989 இல் நவீல்ட் பாடசாலையில் இணைந்து கல்வியைத் தொடர்ந்தார். எனினும் நாட்டில் ஏற்பட்ட போர் சூழல், இடப்பெயர்வுகள் இவரது கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தியது. எனினும் இப்பாதிப்புக்களிலிருந்து வெற்றிகரமாக மீண்ட இவர் 2001ம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகி ஒரு கலைப்பட்டதாரியாக 2005 ஆம் ஆண்டு வெளி வந்தார்.

பட்டம் கிடைத்த அடுத்த மாதமே யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் சமூக சேவை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் பதவி கிடைத்தது. பின்னர் 2015 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ம் திகதி மாகாண கல்வி திணைக்கழத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். பின்னர் 2016 ம் ஆண்டு தை மாதம் 4 ம் திகதி வலிகிழக்கு பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்ற இவர் அங்கு அபிவிருத்தி உத்தியோகத்தராக தற்போது வரை பணியாற்றி வருகின்றார். இவர் இப்பொழுது மனைவி பிள்ளைகளுடன் கோண்டாவிலில் வசித்து வருகின்றார்.